# பின்பற்றப்பட வேண்டிய வேதம்!

இப்னு சித்தீக், கடையநல்லூர்

இப்பேரண்டத்தைப் படைத்துப் பரிபாளனம் செய்யும் மாபெரும் அரசனாகிய அல்லாஹ், மனிதர்கள் நேரிய சீரான வழியில் நடைபயில வேண்டும், தான் ஏவியதை எடுத்துச் செயல்படுத்திடவும், தான் விலக்கியதை விட்டுத் தவிர்ந்து வாழ்ந்திடவும், அந்தந்த காலங்களில் வாழ்ந்த மக்களிடம் தன் புறத்திலிருந்து தூதர்களை அனுப்பி தம் சமுகத்தினரை நன்மையின்பால் அழைத்து, தீமையை விட்டு தடுக்கும் பணியை வழங்கி, அவர்களில் சிலருக்கு வேதங்களையும், ஆகமங்களையும் வழங்கி இவ் இறைப்பணியை சிறப்புறச் செய்யப் பணிந்தான். அத்தகைய தூதர்களில், நபிமார்களில் இறுதியாக இப்புவியில் தோன்றியவர்கள் நமது தலைவர் நபி(ஸல்) அவர்கள். அவர்களுக்கு வழங்கப்பட்ட உயரிய வேதம்தான் அல்குர்ஆன்.

இந்த ஒப்புயவர்வற்ற வேதம் நபி(ஸல்) அவர்களின் 23 ஆண்டு கால வாழ்க்கையில், காலச்சூழக்கு ஏற்ப இறைவனின் புறத்திலிருந்து அருளப்பட்டு நபியவர்களின் மரணத்திற்கு முன்பாகவே முழுமைப்படுத்தப்பட்டு விட்டது.

திருமறை குர்ஆன் தன்னைப்பற்றி இவ்வாறு பறை சாற்றுகிறது.

“இது (அகிலங்களின் இரட்சகனாகிய) அல்லாஹ்வின் வேதமாகும். இதில் யாதொரு சந்தேகமும் இல்லை. இறையச்ச முடையோர்க்கு இது சீரிய வழிகாட்டியாகும்”. *அல்குர்ஆன் 2:2*

“உண்மையில் இக்குர்ஆன் முற்றிம் நேரான வழியைக் காட்டுகிறது”. *அல்குர்ஆன் 17:9*

“இது (குர்ஆன்) அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் அருள் வேதம்”. *அல்குர்ஆன் 25:1*

“மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும், மேம் நேர்வழியின் தெளிவான அறிவுரைகளைக் கொண்டதும், சத்தியத்தையும், அசத்தியத்தையும் பிரித்துக் காட்டக் கூடியதுமானது (இவ்வேதம்)”. *அல்குர்ஆன் 14:1*

ஆக மனித வாழ்க்கைக்கு தேவையான அனைத்து வழிகாட்டுதல்களையும் உள்ளடக்கிய ஒன்றுதான் இந்த திருமறை குர்ஆன்.

இத்தனை உயர்ந்த இந்த குர்ஆனை, இன்றைய மனித சமுதாயம் குறிப்பாக முஸ்லிம் சமூகம் எப்படியெல்லாம் பயன்படுத்துகிறது என்றால்,

ஒரு தனி மனிதனின் வாழ்வில் குர்ஆனின் பங்கு என்பது, அவன் பிறக்கும் போது பெயர் சூட்டும் வைபவத்திம், அவன் சிறிது வளர்ந்த பிறகு கத்னா (சுன்னத்) செய்யப்படும் போதும், வாலிப பருவம் எய்தினால் அவன் திருமணத்திம், அம்மனிதன் தன் உலக வாழ்வை முடித்துக் கொண்டால் அவனது இறப்பிற்காகவும் ஓதப்படும் வெறும் சடங்கு நூலாகவே இந்த குர்ஆன் இச்சமூகத்திற்கு பயன்பட்டுக் கொண்டிருக்கிறது.

இதற்காகவா இந்த குர்ஆன் நமக்கு அருளப்பட்டது? இதற்காக அருளப்பட்ட வேதம் என்றால் இதனை இறைவன் தன் புறத்திலிருந்து வெளிப்படுத்த 23 ஆண்டுகள் தேவையில்லையே! எடுத்த எடுப்பிலேயே ஒரு தொகுக்கப்பட்ட நூலாகத் தந்திடுவது படைத்த அந்த இறைவனுக்கு கடினமான ஒன்றில்லையே!

இவ்வேதம் தான் அருளப்பட்டதற்கான காரணத்தையும் கூறாமல் இல்லை, உலகப் பொதுமறை கூறுகிறது!

“(நபியே!) இதனை நாம் உம்மீது இறக்கி அருளியுள்ளோம். இந்த மக்கள் இதில்ல வசனங்களை சிந்திக்க வேண்டும். அறிவுடையோர் இதிலிருந்து படிப்பினை பெறவேண்டும் என்பதற்காக!”. *அல்குர்ஆன் 38:29*

ஆக இதிலிருந்து, திருகுர்ஆன் சடங்கு சம்பிரதாயங்களுக்காகவும், வழக்குகலின் போதும் சத்தியம் செ

ய்வதற்காகவும், திருநாட்களில் பிரயாணம் செய்வதற்காகவும், இறந்தவர்களுக்கா ஓதப்பெறும் உயிரற்ற வேதமாகவும் அருளிச் செய்யப்படவில்லை. மாறாகிதன் கருத்துக்களை ஆராய்ந்து, தெளிந்து அதன் மூலம் படிப்பினைப் பெற்று அதனைத்தன் வாழ்வில்

கடைபிடிக்கவேயன்றி தவிர குர்ஆன் நமக்கு வழங்கப்படவில்லை என்பதை உணர முடிகிறது.

அல்குர்ஆனை சிந்தித்து செயல்படுத்தாவிட்டால் எத்தகைய அவலம் நேரும் என்பதை நபியவர்களின் வாக்கு நினைவுறுத்துகிறது.

"ஒரு முறை தோழர் ஸைத் பின் ஸாபித்(ரழி) அவர்கள் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டார்கள், "இறைத்தூதரே! நாமும் இஸ்லாமிய (குர்ஆனிய) அறிவைப் பெறுகிறோம். நமது குழந்தைகளுக்கும் கற்றுத் தருகிறோம். அவர்கள் இனை வரும் தலைமுறையினர்க்கு கற்றுத் தருவார்கள். இப்படி இருக்க இஸ்லாமிய அறிவு மறைந்து விடும் என்று நீங்கள் கூறுவது எப்படி சாத்தியமாகும்?

அதற்கு நபியவர்கள், "யூதர்களும், கிருஸ்தவர்களும் தவ்றாதையும், இன்ஜீலையும் படிக்கவில்லையா? இருந்தும் அவர்கள் அதனைப் பின்பற்றவில்லை.

"இவ்வேதத்தையும் நாம் தாம் இறக்கினோம். இது மிக்க அருள் நிறைந்தது. எனவே நீங்கள் 'இதனைப் பின்பற்றுங்கள்', மேம் இறையச்சமுள்ள போக்கினை மேற்கொள்ளுங்கள்! உங்கள்மீது இரக்கம் காட்டப்படலாம்" என்று கூறினார்கள். *அல்குர்ஆன் 6:155*

ஆக குர்ஆனை வெறுமனே படிப்பது மட்டுமின்றி ஆராய்ந்து, தெளிந்து பின்பற்றி எதிர்காலத் தலைமுறைக்கு இஸ்லாமிய அறிவைப் பெருக்கச் செய்வோமாக. அல்லாஹ் நம்மனைவருக்கும் நல்லருள் பாலிப்பானாக!

டிசம்பர் 2005 அந்நஜாத்